29.05.2017

27/07/17

அனுப்புநர்

கோ. உமாதேவி,

967, வேளச்சேரி மெயின்ரோடு,

சேலையூர், சென்னை - 600 073.

பெறுநர் தகவல் அறியும் அலுவலர்

~~ஆணையாளர் பொறுப்பு மற்றும் நகராட்சி பொறியாளர்,~~

தாம்பரம் நகராட்சி,

சென்னை - 600 045.

02870

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்: எண். 967, வேளச்சேரி மெயின்ரோடு உள்ள வீட்டின் வழி குறித்து திரு. N. மோகன் என்பவருக்கு கொடுத்த நோட்டீஸ் நகல் குறித்து விண்ணப்பம்**

-----

மேற்கண்ட விலாசத்தில் உள்ள வீட்டின் வழி குறித்து தாவா தாம்பரம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது (O.S. No. 58 of 2016). இது சம்பந்தமாக திரு. மோகன் என்பவருக்கு தாம்பரம் நகராட்சி மூலமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள விவரம் அறிவதற்காக நோட்டீஸ் நகலை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் உண்மையுள்ள,**

**(கோ. உமாதேவி)**

நகஎண்.2870/17 /எப்1

நகராட்சி அலுவலகம்
தாம்பரம்
நாள் **28.8..2017**

தகவல்

| | |
|---|---|
| பொருள்:– | தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005– தாம்பரம் நகராட்சி – திரு. கோ. உமாதேவி என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் கோரியது – தொடர்பாக. |
| பார்வை:– | 1. திரு. கோ. உமாதேவி 967 வேளச்சேரி மெயின் ரோடு சேலையூர் சென்னை 73 என்பவரின் மனு |

---

பார்வையில் கண்டுள்ள தங்களின் தகவல் அறியும் உரிமை சட்ட மனுவிற்கு கீழ்கண்டுள்ளவாறு தகவல் வழங்கப்படுகிறது.

திரு. N மோகன் என்பவருக்கு கொடுத்த நோட்டீஸ் நகல் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. ~~பதிவேட்டினை~~ கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டதில், மோகன் என்பவருக்கு நோட்டீஸ் ஏதும் இந்நகராட்சி மூலம் அனுப்பப்படவில்லை என்ற தகவல் வழங்கப்படுகிறது.

பொது தகவல் அலுவலர் மற்றும்
நகரமைப்பு அலுவலர்
தாம்பரம் பெருநகராட்சி

28/8/17

பெறுநர்
திரு. கோ. உமாதேவி
967 வேளச்சேரி மெயின் ரோடு
சேலையூர்
சென்னை 73

SP TAMBARAM HPO <600045>
GSTN No: 33AAAGT0350B1ZZ
ET047464134IN
Counter No:6,OP-Code:CS
To:K.UMADEVI,967
CHENNAI, PIN:600073
From:ELUTHAR , CHENNAI
Wt:10grams, ,12/09/2017 ,17:45
Amt:18.00
% 1.5 ,SGST @9%: 1.50

F1

**2005-ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விதி-3 மற்றும் பிரிவு 6-ன் படி சமர்பிக்கும் மனு**

மனுதாரர் பெயர் : E. பாலாஜி S/O N.. ஏழுமலை,
முகவரி : எண், 189/6, கர்ணம் தெரு விரிவு,
சேலையூர், சென்னை - 73.

மனு பெறும் அதிகாரியின்
பெயர் மற்றும் முகவரி : :பொது அலுவலர் அவர்கள்
தாம்பரம் நகராட்சி அலுவலகம்,
தாம்பரம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

REG. POST
NO. 620
DATE

தகவல் கோரும் விவரங்கள் : -

03659

1. நியூ பாலாஜி நகர் மனை பிரிவில் 2-வது பிரதாண சாலையின் அகலம் மற்றும் நிளம் எவ்வளவு ?
2. நியூ பாலாஜி நகர் 2-வது பிரதாண சாலையில் பூங்காவிற்காக இடம் ஒதுக்க்பபட்டுள்ளதா? அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்தால் அதன் பரப்பளவு எவ்வளவு சதுர அடி?
3. நியூ பாலாஜி நகர் மனை பிரிவில் எத்தனை பூங்காக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன? அவைகளை நகராட்சி நிர்வாகம் பராமரிக்கின்றதா?
   நியூ பாலாஜி நகர் மனை பிரிவின் ஒப்புதல் பெற்ற நீல நிற வரை படம் நகராட்சியால் பராமரிக்க படுகிறதா?
4. நியூ பாலாஜி நகர் மனை பிரிவின் பொது இடங்களை நகராட்சி சபை மனை பிரிவுகளாக மாற்றுவதற்கு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதா? இயற்றபட்டிருந்தால் எந்த ஆண்டு என்பதனை தெரிவிக்கவும்.
5. நியூ பாலாஜி நகர் மனை பிரிவின் தெருக்களுக்காக எவ்வளவு செண்ட் நிலம் தான பத்திரமாக நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்கள் உடனே தேவைப்படுவதால் தாங்கள் இவ்விண்ணப்பம் கிடைத்த 07 தினங்களுக்குள் உரிய பதில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்களுக்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உண்டான நீதிமன்ற கட்டண வில்லை ரூ.20/- இத்துடன் செலுத்தியுள்ளேன். மேலும் கட்டணங்கள் தேவைப்படும் பட்சத்தில் தாங்கள் கேட்கும் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த தயாராக உள்ளேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம்: தாம்பரம்

தேதி: 7.10.17

இப்படிக்கு
E. Bwy

நகஎண்3659/2017 /எப்1

நகராட்சி அலுவலகம்
தாம்பரம்
நாள் **6.11.17**

| | |
|---|---|
| பொருள்:– | தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005– தாம்பரம் நகராட்சி – திரு.E பாலாஜி என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் கோரியது – தொடர்பாக. |
| பார்வை:– | திரு.E. பாலாஜி எண் 189/6 கர்ணம் தெரு விரிவு சேலையூர் சென்னை 73 என்பவரின் மனு |

---

------

பார்வையில் கண்டுள்ளவாறு தகவல் அறியும் உரிமை சட்ட மனு நகலில் கோரியுள்ளதற்கு கீழ்கண்டவாறு இருக்கின்ற தகவல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| கேள்வி1 | சாலை நீளம் மற்றும் அகலம் குறித்து சர்வே பதிவேடுகள் தனி வட்டாட்சியர் நகர நில வரிதிட்டம் கிருஷ்ணா நகர் மேற்கு தாம்பரம் அலுவலகத்தில் கோரி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது |
| கேள்வி 2,3 | மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மனைப்பிரிவு வரைப்படம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் விவரம் இல்லை |
| கேள்வி 4 | மனைப்பிரிவில் பொது இடங்களை மனைகளாக மாற்றப்பட்டதற்கான தகவல் ஏதும் இவ்வலுவலகத்தில் இல்லை |
| கேள்வி 5 | சாலைகள் தானமாக கொடுத்தற்கான விவரங்கள் இவ்வலுவலகத்தில் இல்லை |

பொது தகவல் அலுவலர்
மற்றும் நகரமைப்பு அலுவலர்
தாம்பரம் பெருநகராட்சி

பெறுநர்
திரு. E. பாலாஜி
எண் 189/6 கர்ணம் தெரு விரிவு
சேலையூர்
சென்னை 73

அனுப்பப்பட்டது
நாள் 07.11.17
RTI 2016
அனுப்புகை எழுத்தர்